



FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,



உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல.
வாழ்வு தனது தாகத்திற்குப் பெற்றெடுத்த மக்கள் அவர்கள்.
அவர்கள் உங்கள் மூலம் வந்திருக்கலாம். உங்களிடமிருந்து அல்ல.
அவர்கள் உங்களோடு இருந்தாலும் உங்களுக்குச் சொந்தமல்ல.
அவர்களுக்கு நீங்கள் உங்கள் அன்பைத் தரலாம்; சிந்தனையை அல்ல.
அவர்களுக்கென்று சொந்த சிந்தனை இருக்கிறது.
அவர்கள் உடலுக்கு நீங்கள் உறையுள் கொடுக்கலாம் ஆன்மாவிற்கு அல்ல.
காரணம் அவர்கள் ஆன்மா நாளை என்ற வீட்டில் உறங்குகிறது.
அதனை நீங்கள் உங்கள் கனவிலும் தரிசிக்க முடியாது.
அவர்களைப் போல ஆக நீங்கள் முயலலாம். உங்களாக அவர்களை ஆக்க முயலாதீர்கள்.
காரணம் வாழ்வு பின்னோக்கிச் செல்வதில்லை.
நேற்றுடன் தேங்குவதில்லை.

—கலீல் கிப்ரான்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# ராஜீவ் கடந்து வந்த பாதை

● 1-12-66: இந்திரா, லண்டனில உள்ள மகன சஞ்சய்க்கு எழுதிய கடிதத்தில்: "...அவன் (ராஜீவ்) இத்தாலியில் தான் இன்னும் இருக்கிறானா அல்லது இங்கிலாந்திற்குத் திரும்பி விட்டானா? கஷ்டமான காலத்தில் அவன் இருந்து வருகிறான். அவனுக்கு உதவி தேவை என நினைக்கிறேன். அவனை மற்றவர்கள் எளிதாக வசப்படுத்தி விட முடியும் உதவாக்கரைகளின் சகவாசத்தில் அவன் இருந்து வருவதாகத் தெரிகிறது. இது எனக்கு கவலையளிக்கிறது."

● 1977 தேர்தலில் இந்திராவும், சஞ்சய்யும் படு தோல்வி அடைந்தவுடன், இந்திரா குடும்பம் இத்தாலிய தூதரகத்தில் புகலிடம் கேட்டார்கள். ராஜீவ் இத்தாலிக்குப் பறக்கத் திட்ட மிட்டார். மிகவும் சிரமப்பட்டே இந்திரா ராஜீவை இந்தியா வில் நிறுத்தி வைத்தார்.

● இளநிலை அரசு அதிகாரிகளுக்குக் கூட வெளிநாட்டுப் பெண்களை மணக்க, பாதுகாப்பு-காரணங்களால் தடை உள்ளது. ராஜீவை மணந்த இத்தாலிய பெண்மணி திருமண மாகி 15 ஆண்டுகள் வரை இந்திய பிரஜையாகவில்லை. அரசு ரகசியங்கள் "ராஜ குடும்பத்தில்" பாதுகாக்கப் படுமா?

● அயல் நாட்டினர் இன்சூரன்ஸ் ஏஜெண்டாக செயல் படவும், அரசு இல்லத்தில் தங்கி சொந்த வியாபாரம் செய்ய வும் தடையுள்ளது. 1970களில் நெம்பர் 1, சப்தர்ஜங் ரோடு இல்லத்தில் இருந்து கொண்டு சோனியா இன்சூரன்ஸ் வணிகத்தில் ஈடுபட்டது எப்படி?

● பிரதமர் குடும்ப இத்தாலிய தொடர்பு காரணமாக, கடந்த 4 ஆண்டுகளில் இந்திய அரசு 137 இத்தாலி வணிக ஒப்பந்தங்களைக் கையெழுத்திட்டது. இதற்கு முந்திய ஆண்டு சராசரி இத்தாலிய காண்ட்ராக்டுகள் 10 மட்டுமே. "தால்வைஷட்" திட்டத்திற்கு பிற லாபகரமான, திறம் படைத்த மேலை நாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்

FREE E- BOOKS , www.thamizham.net.,

யும்படி நிபுணர் குழு சிபாரிசு செய்தும் ஒரு இரண்டாந்தர மான இத்தாலிய நிறுவனத்துடன் தான் ஒப்பந்தம் செய்யப் பட்டது. இதனால் வெறுப்படைந்த உலக வங்கி, 250 மில்லியன் டாலர் கடனை இந்தியாவுக்கு ரத்து செய்து விட்டது.

● செப்டம்பர் 1984இல் ராஜீவ் மேற்பார்வையில், நாக் பூரில் பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர் காங்கிரஸ் மாநாடு, செக்ஸ், குற்றவியல் அத்துமீறல் கோட்டமாக ஆகியது. காங்கிரசாரின் இச்செயலுக்காக ராஜீவ் இதுவரை மன்னிப்பு கேட்கவேயில்லை.

இனி வரப்போகும் பாதையையாவது ராஜீவ் மக்கள் நம்பிக்கைக்கு உரியதாக்குவாரா?

—கார்த்திக்

## நமது மஞ்சள் மருத்துவம்

**சேற்றுப் புண்ணா?** மஞ்சளையும், கடுக்காயையும் சம அளவு உரைத்து எடுத்து கலக்கவும். இரவு படுக்கும் முன் கால் விரல்களைச் சுத்தம் செய்த பின் சேற்றுப் புண் வந்த இடத்தில் தடவவும் சில நாட்கள் செய்தால் புண் பட்டுப் போகும்.

**அஜீரணம், வயிற்றுக் கோளாறா?** கொஞ்சம் மஞ்சள் தூளைச் சாதம் வடித்த கஞ்சியில கலந்து அதன் தெளிவை உட்கொண்டால் குணம் தெரியும்.

**இருமல், தொண்டை எரிச்சலா?** படுக்கு முன் ஒரு டம்ளர் பாலில் மஞ்சள் தூள் ½ ஸ்பூன், 10 பல் பூண்டு, கொஞ்சம் கல்கண்டு சேர்த்து நன்கு காய்ச்சி, சூட்டோடு பருகவும், தொண்டை இதமாகும். மஞ்சள் தூளைத் தேனில் குழைத்து சாப்பிட்டாலும் விடாத இருமல் அடங்கும்.

**ஜலதோஷமா?** நீண்ட மஞ்சள் துண்டின் முனையை நெருப்பில் காட்டி பற்ற வைக்கவும். அதிலிருந்து கிளம்பும் புகையை முகர்ந்தால் ஜலதோஷம் பறந்தோடும். >-

FREE E- BOOKS , www.thamizham.net.,

**இரத்தக் கட்டு, சீழ் கட்டிகளின் உபாதையா?** சூடாக்கிய சாதத்தோடு மஞ்சள் தூளைக் கலந்து, பிசைந்து, பாதிக்கப்பட்ட இடத்தின்மேல் சூட்டோடு பரப்பி கட்டுப் போடவும். காலையே ஓரளவு குணம் தெரியும். மறுநாளும் தொடருங்கள் சரியாகும்.

**நகச் சுற்றா?** சுண்ணாம்பையும், மஞ்சளையும் சேர்த்துக் குழைத்துப் போட்டால் நகச்சுற்று மறைந்து விடும்.

**சரும நோயா?** பச்சை மஞ்சள், அறுகம் கல், வேப்பிலை, பாசிப்பயிறு இவற்றைச் சேர்த்து அரைத்து அவ்விழுதைக் குளிக்கு முன் தடவி சிறிது நேரம் கழித்துக் குளித்து வரவும். பெரும்பான்மையான சருமத்தொல்லைகள் இதில் கட்டுப்படும்.

(அடுத்து: நமது இஞ்சி மருத்துவம்) —சித்தன்

பயணத் தொடர்...

# பயண அனுபவங்களின் பாதை வெளிச்சங்கள்

பலநூறு ஆண்டுகளாக நம் மண்ணில் தோன்றிய நீதிகள், நெறிகள், அறிவுரைகள் ஏட்டளவில் வாழ்கின்றனவே தவிர, மக்கள் வாழ்வளவில் கடைபிடிக்கப்படுகின்றனவா? கள் குடிக்கக்கூடாது எனத்திருவள்ளுவர்தொடங்கி, மகாத்மா காந்தி வரை முழங்கோ முழங்கு என்று முழங்கி விட்டார்கள். இன்று சாராயக்கடை ஏல வருவாய்தான் நாட்டையே நடத்தி வருகிறது.

நம் நாட்டில் அறிவுரைகள், பேசப்பட்ட அளவிற்கு பின்பற்றப் படவில்லை. இன்று நாம், தலைக்கு மேல் வைத்துக் கொண்டாடும் பல இலக்கிய விசாரங்களும் பொது மக்களைப் பாதிக்கவே இல்லை, குடித்துவிட்டு நடித்துக் காட்டிய நந்தனார் வேடதாரிகளே இங்கே இருந்தார்கள்! ஊர்க்கோயிலோரச் சிவப்பு விளக்கு பகுதிப் பெண்கள்தாம் கண்ணகி வேடமிட்டு நடித்தார்கள். மக்கள் நடிகரையும் நடிகையையும் ரசித்தார்கள்; நாடகத்தையும் ரசித்தார்கள்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஆனால் வாழ்க்கையில் கோவலர்களாகவே வாழ்ந்தார்கள்!

தமிழர்கள்,பல தலைமுறை அயல் இன ஆதிககத்திற்கு அடிமைப்பட்டுப் போவதற்கு இந்த ரசிகத் தன்மை முதற் பெருங் காரணம்!

நம் மக்களிடம் காணப்படும் காட்டப்படும் குறைகளைப் போக்க வழியே இல்லையா? உறுதியாக உண்டு. தமிழ் நாட்டிலிருந்து கடல் தாண்டிச் சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் தென்னாப் பிரிக்காவிலும் வாழும் தமிழர், அங்கெல்லாம் தூய்மையாக உயர்வாக வாழ முடியும் என்றால் அவர்கள் பிறந்த நாட்டில் அவ்வாறு வாழ முடியாதா? உறுதியாக முடியும். ஆளும் அதிகார வர்க்கமும் சூழும் சமூக அமைப்புகளும் நினைத்தால் இங்கேயும் முடிய வேண்டும்.

வெளிநாடுகளைப் பார்க்கிற பொழுது, அந் நாட்டார் படைத்து விற்பனை செய்யும் பதிவுநாடா முதல் பலவேறு பொருட்கள் நம்மைக் கவர்ந்து இழுக்கின்றன- அவற்றை வாங்கிக் கொண்டுவந்து விடுகிறோம் கொஞ்சநாளில்;இந்த நாட்டில் கூட. அந்தப் பொருள்களைப் படைத்துவிட முடிகிறது. இந்த பொருள் இறக்குமதி மட்டும் போதுமா? அந்த நாடுகளில் உள்ள நல்ல பண்புகள் பழக்கவழக்கங்கள் நல்ல பண்பாடுகள் நமக்கு வேண்டாம?

கடியாரத்தை வாங்கிய நமக்குக் காலம் பிறழாமல் நடக்கத் தெரிய வேண்டாமா?

நமக்கே உரிய சீரிய பண்புகளை விடாமல் காத்துக் கொள்வதிலும் அயற்புரத்தில் சீரியனதாக இலங்கும் நற்குணங்களை ஏற்றுக்கொள்வதிலும் நாம் அக்கறை காட்ட வேண்டும். இவ்வாறு அக்கறை காட்டுவதில் ஓர் அவசர நிலையை நாம் கடைப்பிடித்தாக வேண்டும். இன்றேம் நமக்குரிய நல்லியல்புகளையும் ஒருபுறம் இழந்து நிற்போம். அதனுடன் அயல்நாடுகளில் கடைத்தரமாகக் கருதப்படும் இழிகுணங்கள் திரைப்படம் தொலைக்காட்சி பத்திரிகைகள்

FREE E- BOOKS , www.thamizham.net.,

வழி நம் மக்களிடம் பரவி நம்மை நாசப்படுத்திவிடும். இன்றைய இழிநிலையே இனியும் நீடித்தால் நம் எதிர்கால நிலைமை—நரகாபுரிதான்! அதில் ஐயமே இல்லை.

நம் பயணம் நலமாபுரி நோக்கிச் செல்ல என் வெளிநாட்டு அனுபவங்கள் சில வெளிச்சங்களைத் தருகின்றன. அவ்வெளிச்சங்கள் அடுத்த இதழ்களில் காட்டப் பெறும்...

—அறவாணன்

---




ஒரு காலத்தில் [illegible] சகோதரர்கள் [illegible] வந்தனர். [illegible] அதிர்ஷ்டத்தைத் தேடிப் புறப்பட்டுச் சென்றனர்.

வழியில் அவர்கள் ஒரு பெரிய குழியைக் கண்டனர். அதனுள் அதிர்ஷ்டம் உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தனர்.

“என் அருமைச் சிறுவர்களே, நீங்கள் எதைத் தேடுகிறீர்கள்?” என்று கேட்டது அதிர்ஷ்டம்.



மூத்தவன் சொன்னான்: “நான் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.”

அதிர்ஷ்டம் அவனிடம் ஒரு விஞ்ஞானக் கலை [illegible] கொடுத்தது.

இரண்டாமவன் சொன்னான்: “நான் பணக்காரனாக விரும்புகிறேன்.”

அதிர்ஷ்டம் அவனுக்கு ஏராளமான பணத்தைக் கொடுத்தது.

மூன்றாமவன் சொன்னான்: “[illegible] பயணியாக விரும்புகிறேன்.”



அதிர்ஷ்டம் அவனிடம் மிகமிக [illegible] கொடுத்தது.

“உனக்கு என்ன வேண்டும்?” என்று அதிர்ஷ்டம் கடைக்குட்டிச் சகோதரனிடம் [illegible] கேட்டது.

அதற்கு அவன் [illegible] வேண்டும் என்று [illegible].



“நான் இந்தக் குழியை விட்டு வெளியே வந்தால் போதும்” என்று அதிர்ஷ்டம் [illegible] கூறியது.

கடைக்குட்டிச் சகோதரன் அவ்வாறே அதிர்ஷ்டத்தை அந்தக் குழியிலிருந்து வெளியே இழுத்து விட்டு விட்டுத் தன் வழியே சென்றான். அதிர்ஷ்டமோ அவனுக்குப் பின்னால் ஓடியது.

(நன்றி: சோவியத் நாடு)

—[illegible]

FREE E- BOOKS , www.thamizham.net.,

புத்தகப் பிரிவு



# வால்காவிலிருந்து கங்கை வரை




ஆசிரியர்: ராகுல சாங்கிருத்தியாயன்
தமிழாக்கம்: கண. முத்தையா
வெளியிட்டோர்: தமிழ்ப் புத்தகாலயம்,
58, டி. பி கோயில் தெரு, சென்னை 600 005.

விலை: ரு. 20—00

இந்நூல், மனித சமுதாயத்தின் தோற்றம், வளர்ச்சி, நாகரிகம் முதலியவைகளைச்சாதாரண மக்களும் புரிந்து கொள்வதற்காக தகவல் களஞ்சியம் போன்று எழுதப்பட்டு உள்ளது. இதில் 20 கதைகள் அடங்கியுள்ளன. ஒவ்வொன் றும் மனித சமுதாய வளர்ச்சியின் ஒவ்வொரு படிகள். இக்கதைகளுள் அடங்கியுள்ள கருத்து முத்துக்களுள் சில பின்வருமாறு :—

சமூகத்தின் ஒவ்வொவரும் அவர்கள் ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி, சேர்ந்தேதான் தேட வேண்டும். சேர்ந்தேதான் அநுபவிக்க வேண்டும். ஒன்றும் கிடைக்க வில்லையானால் சேர்ந்தேதான் பட்டினி கிடக்க வேண்டும்; சமூகத்திற்கல்லாமல் தனிப்பட்ட யாருக்கும் எந்த உரிமையும் கிடையாது.

பழமை எல்லாம் ஏற்றுக் கொள்ளக் கூடியவை என்றும், புதியனவெல்லாம் தள்ளிவிடக் கூடியவை என்றும் கூறுவது முற்றிலும் தவறு.

ஜனசமூகத்தின் உழைப்பைக் கொண்டு அரசன் சகல போகங்களையும் அனுபவிப்பான். கடவுள் பெயரையும் தெய்வங்கள் பெயரையும் கூறி ஜனங்கள் மௌனமாகக் கீழ்ப்படிந்து நடக்கும்படி செய்வதற்காகப் புரோகிதனுக்கு அரசன் லஞ்சம் கொடுத்து அவனைத் தனக்குப் பக்கபலமாக

FREE E- BOOKS , www.thamizham.net.,

வைத்துக் கொள்வான். இவ்விதம் அரசனும் புரோகிதனும் சேர்ந்து ஜனங்களைத் தங்களுடைய நிரந்தர அடிமைகளாக்கி விடுவார்கள்.

எல்லாம் வேஷம்; யாவும் வஞ்சனை. மக்களின் உழைப்பின் பலனைச் சுரண்டிச் சாப்பிடுவதற்குச் செய்த வழிகள், இந்த அரச பதவி, பிராமண பதவி, வேள்வி, பிரம்ம வாதம் எல்லாம். மக்கள் தானே உணராதவரை, யாரும் அவர்களுக்கு உணர்த்த முடியாது. அவர்கள் தானே உணரும்படி, இந்த சுய நலக்காரர்கள் விடமாட்டார்கள்.

துக்கப்படுவதற்குரிய ஒரு பொருள் என்ற ஒரே நோக்கோடு வாழ்க்கையைப் பார்ப்பதால் அதனுடைய பெருமை குறைந்து விடுகிறது. மேலும், நமது உழைக்கும் சக்தியும் பாழாகி விடுகிறது.

நமக்கு மாற்றம் வேண்டும். ஆனால், அது முன்னோக்கிச் செல்வதாய் இருக்க வேண்டும். பின்னோக்கி அல்ல. கடந்த காலம் பிணத்திற்குச் சமானம் என்று நான் கருதுகிறேன்.

மனத்திற்குள் காம இச்சையையும் விபசார ஆசையையும் வைத்துக் கொண்டு, வெளியில் புலன்களை அடக்கி ஆள்வதாகவும், ஒழுக்க சீலராகவும், மகாத்மாவாகவும் காட்டிக் கொள்வது, வெறுக்கத் தக்கது.

ஏழைகளின் வருமானத்தைச் சுரண்டி வாழும் பணக்காரர்களும், அரசர்களும் இருக்கும்வரை மனிதரிடையே சகோதரத்துவம் ஏற்பட முடியாது.

புரட்சி அல்லது புரட்சிகரமான போராட்டம் ஒரு தனி மனிதனின் பலத்தைக் கொண்டு மட்டும் நடப்பதல்ல. புரட்சியால் ஏற்படும் மகத்தான மாற்றங்கள் ஒருவரல்ல—அரை டஜன் மகாத்மாக்களின் சக்திக்கும் அப்பாற்பட்டது.

இந்தியாவிற்கும் உலகத்திற்கும் நன்மை பயக்கக் கூடியது பொதுவுடைமைக் கொள்கை தான்.

—இந்திரா துரை


---

✳ கண்பார்வை இல்லாதவர்கள் படிக்கும் பிரெய்லி எழுத்துக்களைக்கண்டுபிடித்தது கண்பார்வை தெரியாத ஒரு பதினைந்து வயது மாணவன்.

-டெக்கான் ஹெரால்ட்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# இராமசாமியின் இரத்த மண்டலம்



இராமசாமியின் உடம்பில் உள்ள இரத்த குழலின் மொத்த நீளம் 1, 20,000 கி.மீ. நம்பூமியை ஏறத்தாழ 15 முறை சுற்றிவந்து விடலாம்; அவ்வளவு நீளம் இந்த நீண்ட நெடும் பாதையில் சென்று ஏறத்தாழ 60 கோடி வாடிக்கையாளரின் கதவைத் தட்டி அவர்களோடு தொடர்பு கொள்ளும் ஓர் அஞ்சலக சிப்பந்தி நான். என் வாடிக்கையாளர்கள் வேறுயாரும் அல்ல.இராமசாமியின் உடலில் உள்ள ஜீவஅணுக்களே (CELLS). இந்த செல்களுக்கு நான் உயிரைக் கொடுத்து அவற்றின் கழிவுப் பொருளைச் சுமந்து வருகிறேன். நான் தான் இராமசாமியின் இரத்தம்

ஒரு பெரிய நகராட்சியின் குடி நீர் வழங்குதிட்டத்தை என் பணிக்கு ஒப்பிடலாம். இந்த இரத்த ஆற்றில் தான் ஒரு வினாடிக்கு 12 ' லட்சம் பிணங்கள் செத்து மிதக்கின்றன. அவை இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்களே.ஆனால் அதை ஈடு செய்ய பல கோடி அணுக்களை எலும்பினுள் இருக்கும் ஜீவசத்து (MARROW)உற்பத்தி செய்து தள்ளுகிறது.

இவை மட்டுமா ரத்தத்தில் பாய்கிறன! லூகோஸைட், வெள்ளை ரத்த அணுக்கள், லிம்போ ஸைட், மானோஸைட், பிளேட்லெட் என்னும் துகள்கள் யாவும் மிதந்து செல்கின்றன. இன்னும் கோலஸ் டரால் என்னும் கொழுப்பு, சர்க்கரை, உப்பு, என்ஸைம் என்னும் ஊக்கிகள் முதலியனவும் கலந்து இரத்தத்தை ஒரே குழம்பாக்கி விட்டிருக்கின்றன. இதனை ஒரு குறிப்பிட்ட திரவநிலையில் வைப்பதற்காக இராமசாமி ஏராளமாகத் தண்ணீர் குடிக்க வேண்டியிருக்கிறது. அதிகப்படி தண்ணீரை அசுத்தங்களுடன் அவருடைய சிறுநீரகங்கள் வெளியேற்றி விடுகின்றன.

இருதயத்திலிருந்து நான் புறப்பட்டுக் கட்டைவிரல் பருமன் உள்ள ஐயோர்ட்டா வழியாகப் பாய்ந்து இறுதியில்

FREE E- BOOKS , www.thamizham.net.,

கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய இரத்தக் குழாய்களில் பாய்கிறேன். அந்த இறுதிக்கட்டத்தில் நுண்வலையாக (CAPILLARY) இருக்கும் குழாய்களில் உடலின் ரசவாத வித்தை நடைபெறுகிறது. அந்த நுண்வலையில் இரத்தம் புகுந்து வரும் போது சிவப்பணுக்கள் நசுங்கி உருமாறி வெளிவருகின்றன என்றால் எவ்வளவு சிறிய இரத்தக் குழல் என்று பார்த்துக் கொள்ளுங்கள்.
வெளியே வரும் போது கரியமில வாயுவைச் சுமந்து கெட்ட ரத்தமாக வருகின்றேன். மீண்டும் சுத்திகரிப்புக்கு நுரையீரலுக்கும் (LUNGS) இதயத்திற்கும் செல்கிறேன். எனக்கு ஓய்வே கிடையாது.

என்னைச் சரியான நிலையில் வைப்பதற்குப் பொது உடற்பயிற்சி, யோகாசனம்குறிப்பாகபிராணாயாமம்போன்றவற்றை இராமசாமி கட்டாயம் செய்தாக வேண்டும்.

அடுத்து : முதலுதவி—மாரடைப்பு

# புற்றுநோய் - கேள்வி பதில்

✳ கல்லீரல் புற்றுநோய் (LIVER CANGER) தற்போது தென் ஆர்க்காடு மாவட்டத்திலும் ஆந்திராவின் முந்திரி விளையும் மாவட்டங்களிலும் அதிகம் என்கிறார்களே, ஏன்?

இந்த கல்லீரல் புற்று நோய் HEPATO CELLULAR CARCINOMA எனப்படுகிறது. மேற்கண்ட இரண்டு இடங்களிலும் மக்கள் சமையலுக்குப் பயன்படுத்தும் கடலை எண்ணெய் தான் காரணமாக இருக்கவேண்டும் என்று சென்னை மருத்துவக் கல்லூரி ஆய்வு நடத்தி உண்மையைக் கண்டுபிடித்துள்ளது. அவ்விருமாவட்டங்களிலும் கடலை எண்ணெய் எடுக்கும் அதே இயந்திரச் செக்கிலேயே மாறி உட்கோளுக்குவாத (NONEDIBLE) முந்திரி ஓட்டிலிருந்து எண்ணெயும் எடுக்கிறார்கள் என்பது தெரிய வந்துள்ளது. தயாரிப்பாளர்களும், அரசும், மக்களும் இதைக் கண்டு கொள்ளவே இல்லை. உடனடி நடவடிக்கை தேவை

✳ உணவு சீர்திருத்ததால் புற்று நோயைக் கட்டுபடுத்த முடியுமா?

FREE E- BOOKS , www.thamizham.net.,

முடியும். இதைப்பற்றிய தம் ஆய்வினை வால்டர் ராஸ் என்பவர் மேல்நாட்டு பத்திரிகைகள் எல்லாவற்றிலும் வெளியிட்டுள்ளார். அவர் சிபார்சுகள் வருமாறு :-

1. CAROTENE அதிகம் உள்ள அதாவது A விடமின் மிகுந்த காரட், முட்டைக் கோசு முதலிய காய்கறிகள் புற்று நோய் வராமல் பார்த்துக் கொள்கின்றன.

2. உப்பு மிகுந்த ஊறுகாய் மீன்கருவாடு, கொழுப்பு மிகுந்த புலால் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்

3. பெரும்பாலும் மது பானம் அருந்துகின்றவர்கள் புகைகுடிப்பவர்களாக இருக்கிறார்கள். இந்த இரண்டையும் அடியோடு ஒழித்திடல் வேண்டும்.

(தொடரும்) — சு . பா .

# 17 ஆண்டுகள் தூங்குகிறோம்!

✳ இந்தியாவைப் போல் வளர்ச்சியுற்று வரும் ஓர் ஆசிய நாட்டில் மனிதனுக்குச் சராசரி வாழ் நாள் ஐம்பது ஆண்டுகள்.

இதில் பதினேழு வருடங்களை அவன் தூங்கிக் கழிக்கிறான். மனிதனுக்கு அப்படித் தூங்கி, ஓய்வு எடுத்துப் புத்துணர்ச்சி பெற வேண்டியிருக்கிறது. பசுக்களைப் பாருங்கள்; அவை தூங்குவதே இல்லை.

மீதமுள்ள 33 ஆண்டுகளில் மனிதனுக்குச் சாப்பாட்டு நேரம் இரண்டு ஆண்டுகள். டன் கணக்கில் அவன் உணவை அருந்தியிருப்பான், இந்த இரண்டு ஆண்டுகளுக்குள் கல்விக்காக அவன் செலவிடும் காலம் மூன்று வருடங்கள். வேலை செய்வதில் கழியும் ஆண்டுகள் ஒன்பது. மீதமுள்ள பத்தொன்பது வருடங்களை மனிதன் தன் இஷ்டம் போல் செலவழிக்கலாம். சினிமா நாடகம், பார்க், கடற்கரை, கிளப், நடனம், அரட்டை என்று இப்படி எத்தனையோ இல்லையா? வெட்டிப் போதாகவும் கழிக்கலாம் தானே? இந்தப் 19 ஆண்டுகளை வீணாக்காமல் திறம்படப் பயன்படுத்துபவனே சராசரி மனிதனிலிருந்து வேறுபட்டுத் தனிச் சிறப்புப் பெறுகிறான்.

-டெப்த் வியூஸ்

ஆர்.எஸ். சுப்பிரமணியன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# ஆஸ்துமாதானே!

இனி கவலையே வேண்டாம்! வியக்கத்தக்க வகையில் சுகமடைய இலவச ஆலோசனை பெற, கடிதம் எழுதுங்கள்.

முகவரி :- ஞானோதய வைத்தியர்,
Dr. C. K. மாணிக்க வாசகம்,
செலந்தம்பள்ளி P. O. திருப்பத்தூர்
N. A. 635653

மேலும் முழு விபரம் அறிய 15—11—84 தேதி முதல் 15—1—85 தேதி வரை உள்ள துக்ளக் இதழ்களில் எமது விளம்பரம் பாருங்கள்.



**காது கேட்கச் செய்வது எமது பணி**

வெளியே தெரியாமல் அணிந்து கொள்ளக்கூடிய ஆர்பி (ARPHI) ஹியரிங் எய்டுகள் மூலம் உங்களுக்கு நன்றாகக் காது கேட்கச் செய்ய எங்களால் முடியும். எல்லாவித ஹியரிங் எய்டுகளுக்கும் நாங்கள் 'சர்வீஸ்' செய்து தருகிறோம். விற்பனையும், சர்வீஸும் உத்திரவாதமானவை.

**இயர் எய்ட்ஸ்**

4, வடக்கு உஸ்மான் ரோடு,
கோடம்பாக்கம் ஓவர்பிரிட்ஜ் ஜங்ஷன்
தி.நகர், சென்னை-600 017
போன் : 440361

**உஷாராயிரு!**
**உஷாராயிரு!**

பொதுவுடமை கவிஞர்
மு. மணிமுடியின் முதல்
கவிதைத்தொகுப்பு—
உஷாராயிரு! — ரூ 7-00

நூல் கிடைக்குமிடம் :

**பொன் முத்து பதிப்பகம்**
399/D, மிலிட்டரி சாலை
சென்னை-600 021

நியூ செஞ்சுரி
புக் ஹவுஸ் பி. லிமிடட்,
சென்னை-600 098.


FREE E- BOOKS , www.thamizham.net.,

## காதல் படங்கள்

பாலச்சந்தர் படங்களில் பிரதானமாக பெண்மைக்கு அடுத்ததாக மேலோங்கியுள்ள அம்சம் காதல். காதல் என்பது வானத்திலிருந்து மிதந்துவரும் ஏகாந்தமான தேவதையல்ல. வையத்தில் வாழும் மானிடர்க்கு மத்தியில் - ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் உள்ளத்தில் அரும்பும் உன்னத உணர்வு அது. ஆனால் காதலுக்கு ஆட்படும் நபர்கள் குடும்பம் என்ற அச்சின் மூலம் சமுதாயத்தோடு பிணைக்கப் பட்டவர்கள். வர்க்க சமுதாயத்தில் காதலுக்கு உரிய ஆணும் பெண்ணும் தனித்துப் போராடுவதால் எதிர்க்கின்ற சக்திகள் பலம் பொருந்தி பல்லாண்டு காலமாக நீடித்திருப்பதால் பெரும்பாலான காதல்கள் தோற்றுப் போகின்றன.

பாலசந்தரின் காதலர்கள் ஏறக்குறைய இத்தன்மையை உணர்த்த முயன்றிருக்கிறார்கள். சில ஒருதலைக் காதல். சில வெளியிடப்படாமலேயே குமைந்து போகும் காதல். சில கல்யாணத்திற்குப் பிறகும் கலைந்து போகிற காதல். சில அமரத்துவமான நிறைவுடன் மரணித்துவிடும் காதல். அதே நேரத்தில் பலவீனத்தால் ஏற்படுகிற காதலும் உண்டு.

"இரு கோடுகள்" படத்தில் சௌகார் ஜானகியின் காதல் சாதாரணப் பெண்ணாக இருக்கிறபோதே துளிர்க் கிறது. இது அவர் கலெக்டராக உயர்ந்த பிறகும் கூட நீடிக்கிறது. ஆனால் ஜெமினியின் தரப்பிலோ காதலித்து மணந்த மனைவி இறந்து போய்விட்டாள் என்று சொல்லப் பட்டதால் ஜெயந்தியை மணந்துகொள்கிறார். கலெக்டரின் காதல் ஒரு எல்லைக்கு அப்பால் தனித்து நின்று கடைசி வரை தவிக்கிறது. இருதார மணமுறையை அங்கீகரிக்காத இன்றைய சமுதாயத்தில் இது தவிர்க்க முடியாத முடிவு.





FREE E- BOOKS , www.thamizham.net.,

காதல் என்பது ஒரு ஆராதிக்கப்படும் அற்புத அம்சமாக முதன் முதலில் பாலச்சந்தர் புகுத்திய படம் தாமரை நெஞ்சம். எழுத்தாளராக வரும் சரோஜாதேவி தன் வீட்டிலேயே வேறு ஒரு பெண்ணின் கணவனாக உள்ள ஜெமினிகணேசன் மீது ஆழ்ந்த காதல் கொள்கிறாள். இது ஒருதலைக் காதல். ஜெமினியின் ஈரப்பாதச் சுவடுகளுக்குப் பக்கத்தில் தன்னுடைய பாதச் சுவடுகளைப் பதித்து அதன் மூலம் கூட நிறைவு காணத் துடிக்கும் அழுத்தமான காதல் உணர்வு. பெட்டியில் காதலனின் புகைபடத்தை மறைத்து வைத்து பூஜிக்கும் தெய்வீக உணர்வு. ஒரு இலக்கியவாதி யதார்தவாதப் படைப்பாளியாக இருக்க வேண்டும் என்கிற நடைமுறையில் வாழ்ந்த இந்தக் காதலி, தனது சொந்த வாழ்க்கையையே தொடர்கதையாக எழுதி, கதாநாயகி தற்கொலை செய்துகொள்வதாக முடிக்கும் அதே நேரத்தில் தன் வாழ்வையும் முடித்துக்கொள்கிறாள். கற்பிலோ-கல்யாணத்திலோ மட்டுமல்ல, காதல் உணர்விலும் ஒருத்திக்கு ஒருவனே என்கிற உறுதியில் படைக்கப்பட்ட இப்பாத்திரம் மறக்க முடியாதது.

வாழ்க்கை அமைந்த முறையால் விபசாரியாக வாழ நேர்ந்த ஒருத்தியும், ரௌடியாக வாழ நேர்ந்த ஒருவனும் உண்மையாகவே விரும்பி காதலிக்கிறார்கள். விலைமாது என்று தெரிந்தும் அவளை ஆழமாக நேசிக்கும் இந்தக் காதல் அற்புதமானது. ஆனால் சமுதாயம் இவர்களை சேர்த்து வைப்பதில்லை. எனவே இருவரின் காதலும் தோற்றுப் போவது மடடுமல்ல, பழைய பாதைக்கே தப்புத்தாளங்களாய் திரும்ப வேண்டியதாகிறது.

பிக்காஸோ வீட்டுத் திருட்டு! உலகப் புகழ் பெற்ற ஓவியர் பிக்காஸோவின் வீட்டில ஒரு தடவை திருடன் ஒருவன் ஏதோ தேடிக் கொண்டிருந்தான். அதை பிக்காஸோ பார்த்ததும் அவன் ஓடி விட்டான். போலீசாருக்கு உதவியாக இருக்கட்டும் என்று அத் திருடனின் உருவத்தை ஓவியமாக வரைந்து தந்தார் பிக்காஸோ அதனால் என்ன நடந்தது தெரியுமா? அந்நாட்டு நிதியமைச்சரோடு, ஓர் இஸ்திரிப்பெட்டி, ஐஃபெல் கோபுரம் ஆகியவற்றையும் போலீஸார் கைது செய்ய நேர்ந்தது. —இடலி சலீம



FREE E- BOOKS , www.thamizham.net.,

நூல்வேலியில் காதலும், காமமும் இணைந்து காட்டப் படுகிறது. சரிதா மீது சரத்பாபு கொண்டுள்ள உணர்வில் இச்சையே மேலோங்கியுள்ளது. ஆனால் அவர் மீது சுஜாதாவின் தம்பி கொண்டுள்ள உணர்வுதான் உண்மை யான காதல். ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்ட சரிதா இந்த இளைஞனின் காதலை ஏற்பதில்லை.

அபூர்வராகங்களில் விபரீதமாகவும், தண்ணீர் தண்ணீ ரில் கொச்சையாகவும் கூட காதலைக் காட்டியிருக்கிறார் கே. பி. விக்கிரமாதித்தனின் விடுகதை பாணியில் என்று சொல்லப்பட்டபோதும் ஒரு தந்தையும், மகனும் முறையே ஒரு மகளையும் தாயையும் காதலிக்கிற விவஸ்தையற்ற கதாபாத்திரங்கள் தேவையற்றவை.

காதலி முடமாகிப் போனதால் அவள் கேட்டுக்கொண்ட தற்காக அவளைக் கைவிட்டு விடுகிற சுயநலக் காதலனாக ஒரு இளம் கம்யூனிஸ்ட் தண்ணீர் தண்ணீரில் சித்தரிக்கப் படுகிறான்.

அச்சமில்லை அச்சமில்லையில் சரிதாவின் காதல் சற்று வித்தியாசமானது. நல்லவன் என்பதால் ராஜேஷை ஆழ்ந்து நேசித்து திருமணமும் செய்துகொள்கிறார் சரிதா. ஆனால் அயோக்கியத்தனமான அரசியல்வாதியாகி விட்ட தால் தன் காதலையே குழிதோண்டிப் புதைத்துவிட்ட அவரைக் கொல்லவும் செய்கிறாள். நடைமுறைக்கு அப்பாற். பட்டது என்றாலும் இது ஒரு நல்ல அம்சமே.

அக்னிசாட்சியில் பாரதியின் அபிமானியான சரிதா நடனக் கலைஞரான சிவகுமாரை உயிரினும் மேலாக நேசிக் கிறார். இக்காதல் மிகவும் உணர்வுபூர்வமானது. மென்மை யானது. திருமணத்தில் இக்காதல் வெற்றிபெற்ற போதிலும் தாய்மைக்காகத் தன் உயிரை சரிதா தியாகம் செய்கிறார்.

இந்தியா போன்ற ஜாதி, மத, மொழிப் பிடிப்புகள் கொண்ட வளர்ச்சியடைந்த முதலாளித்துவ சமுதாயத்தில் உருவாகிற உண்மைக் காதல் எவ்வாறு தோற்றுப் போகிறது என்பதற்கு மரோசரித்திரா ஒரு சரியான உதாரணம். அம்பிகாபதி-அமராவதி கம்பர் காலத்தையும், அனார்கலி-சலீம் முகலாயர் காலத்தையும் பிரதிபலிப்பதுபோல் இக் காலத்தின் வர்க்க அவலத்தைத் தோலுரித்துக்காட்டும் காதல் கதை இது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

புன்னகையில் ஜெயந்தியின் காதல் வித்தியாசமானது மட்டுமல்ல. விவேகமானதும் கூட. ஒரு சத்தியவான் என்பதற்காகவும் நேர்மையானவன் என்பதற்காகவும் அவனை நேசிக்கும் உயர்ந்த பண்பு இக்காதலியிடம் உண்டு. அதே போல் அடுத்தவனால் கெடுக்கப்பட்டு அவனால் கருத்தரித்து தாயாக ஆனபின்னும் அவளை மனைவியாக்கி ஆழ்ந்து நேசிக்கும் உன்னதப் பண்பு இதன் நாயகனிடம் உண்டு.

பாலசந்தரின் படக்காதலர்களிலேயே தரமும்-லட்சியமும் தியாகத் தன்மையும் கொண்டது மட்டுமின்றி வெற்றியும் பெற்று உயர்ந்து நின்ற உன்னதக் காதலர்கள் இந்தப் புன்னகையில் தான் வருகிறார்கள். (தொடரும்)

—டி. எஸ். ரவீந்திரதாஸ்

## பஞ்சாயத்துத் தேர்தலில் 13 பெண் வேட்பாளர்கள் — ஒரு கிராமத்தின் பெண்ணுரிமைப் போராட்டம்



இந்தோலி! மராட்டியமாநிலத்தில் உள்ள இக்கிராமம் ஆளும் கட்சியின் சர்வதிகாரத்திற்கும், லஞ்ச லாவண்யங்களுக்கும் புகலிடமாக இருந்தது. கிராமத்தலைவர் ஊழலின் மொத்த உருவம்; எனவே அங்கு உட்பூசல் ஏற்பட்டு, சபை கலைக்கப் பட்டு தேர்தல்கள் அறிவிக்கப்பட்டன.

1. லஞ்ச ஊழல் ஒழிப்பு, 2. அரசியல் வசதி மிகுந்த உயர் ஜாதிமக்களின் பிறப்புரிமை என்பதற்கு முடிவு கட்டுதல் 3. அரசியலில் வளர்ந்துள்ள ஆண் ஆதிக்கத்தைக் கட்டுப் படுத்துதல் — இக் குறிக்கோள்களோடு உஷாநிகார் என்பவர் தலைமையிலான ஸ்திரீ முக்தி சங்காத்னா என்கிற அமைப்பு 13 பெண்களைத் தேர்தலில் நிறுத்தியது.

இவ்வளவு பெண்கள் – அதுவும் கீழ்ச்சாதி பெண்கள் கடந்த 36 ஆண்டுகாலமாக சர்வாதிகாரம் செலுத்தி வரும் சக்திவாய்ந்த உயர் சாதி ஆளுங்கட்சி உறுப்பினர்களை எதிர்த்து நிறுத்தப்பட்டது அக்கிராமத்தை புதிய பெண்ணுரிமைப் போராட்டத்திற்கு வழிகோலியது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

பெண் வேட்பாளர்கள் பலவிதங்களிலும் மிரட்டப் பட்டனர். அவர்களது கணவன் மார்களின் ஆண்மையைக் கேலி செய்தனர் "வீட்டில் உட்கார்ந்து வளையல் போட்டுக் கொள்ளுங்கள்" என்பது ஒரு பெண்ணைக் கட்சிதலைவியாக கொண்டிருந்த ஆளுங்கட்சியினர் கிண்டல். இதற்கும் மீறியா விட்டால் வேலை பறி போகும், நிலம் பறிக்கப்படும், சொத்து கிடைக்காது என்று அச்சுறுத்தினர். தங்கள் மனைவியரைத் தேர்தலிலிருந்து வாபஸ் பெற வைத்தால், கணவன்மார் களையே வேட்பாளர்களாக்குவ்தாக ஆசை வார்த்தை காட்டினர். இதனால் உயர்ஜாதியினருக்கும் வசதியானவர் களுக்கும் கிடைத்த தேர்தல் சீட்டு இம்முறை இப்பெண்களின் நுழைவால் கீழ்சாதியினருக்கும் நிலமற்ற விவசாயிகளுக்கும் தரப்படும் கட்டாயம் ஏற்பட்டது.

சகிக்க முடியாத மிரட்டல்களாலும் குடும்பத்தொல்லை களாலும் 13 பெண்களில் 11 பேர் தேர்தலினின்று விலகினர். இருப்பினும் அப்பெண்ணுரிமை இயக்கம் மனந்தளராது தயாராக வைத்திருந்த புதிய 13 பெண்களைத் தேர்தலில் நிறுத்தியது.


## "உடல் பேண உயர்ந்த நூல்கள்"

1. எல்லோரும் பழக எளிதான யோகாசனம் 14 — 6—00
2. நோய்தீர்க்கும் யோகாசனங்கள் — 19—00
3. உங்கள் உடலைப் பற்றி 1000 உண்மைகள் — 27—50

**பூங்கொடி பதிப்பகம்**
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.


FREE E- BOOKS , www.thamizham.net.,

இவர்கள் வேட்பு மனுவை ஏற்பதில் ஆளுங்கட்சி சார்பான அதிகாரிகள் கெடுபிடிகள் செய்தனர். பெண்கள் தளரவில்லை. எல்லாத் தடைகளையும் தூள் தூளாக்கி 13 பெண்கள் தேர்தலில் போட்டியிட்டனர்.

அதிகார பலத்தோடு மோதி இவர்களனைவரும் வெற்றி பெற முடியாவிட்டாலும் ஏழை படிப்பறிவற்ற, பெண்கள் கூட ஒன்றிணைந்தால் அரசியலில் பல மாற்றங்களைச் செய்ய முடியும் என்பதை உணர்த்தியுள்ளனர்

—துரை . மோகன்

# தேர்தல் செலவுக்குப் பணம்?

"தேர்தலில் போட்டியிடுவதற்குப் போதிய பணத்தை, நேர்மையாக உள்ள வேட்பாளர்கள் அடைய சிரமப்படுவார்கள்"

—நானாஜி தேஷ்முக்

மிகப் பெரிய தொகுதிக்கே தேர்தல் கமிஷன் அனுமதிக்கும் செலவு எல்லை ரூ 2.5 லட்சம் தான். ஆனால் பாராளுமன்ற தேர்தல்களில் பிரபல அரசியல் கட்சி வேட்பாளர்கள் ரூ 5 முதல் 15 லட்சம் வரை சாதாரணமாக செலவிடுகிறார்கள். (சில இடங்களில் 30 லட்சம்)

சிறப்பாக இத்தேர்தலில், இந்திரா காங்கிரஸ், தேர்தல் கமிஷன் விதித்த எல்லையை விட 1000 மடங்கு அதிகம் செலவழித்துள்ளது. ரூ 400 கோடி நாடெங்கும் பணத்தை தண்ணீராய் வாரி விட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஒவ்வொரு வேட்பாளருக்கும் 2 கார்கள், 2 வான்கள், ஒலி பெருக்கி, டேப்ரிக்கார்டர் இணைப்புள்ள 5 ஜீப்புகள், 50 காசெட்டுகள், இந்திரா ராஜீவ் தோன்றும் வீடியோ காசெட்டுகள் இவற்றுடன் தலா 4 வீடியோ ரிகார்டர்கள் வழங்கப்பட்டுள்ளன. காங்கிரஸ், இத்தனை வீடியோக்களுக்கும் சுங்க வரி கட்டுகிறதா? இவ்வளவு வெளிநாட்டு வீடியோக்கள் எப்படி வந்தன?

தவிர, ஒவ்வொரு வேட்பாளருக்கும் 10 விதமான பல வண்ண சுவரொட்டிகள், மொத்தம் 1 லட்சத்திற்குக் குறையாமல். (வட மாநிலங்களில் மட்டும் 25 கோடி சுவரொட்டிகள்!) 2000 பானர்கள், 2 லட்சம் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. இதைத் தவிர பலகோடி ரூபாய்

FREE E- BOOKS , www.thamizham.net.,

செலவில் பத்திரிகை, பிற விளம்பரங்கள் தனி. இ. காங்கிரஸ் தவிர பிற கட்சிகளும் தங்கள் பொருளாதாரத்தினை ஒட்டி இதே ரீதியில் தான் செலவழித்துள்ளன.

அரசியல் கட்சிகளுக்கு இவ்வளவு பணம் எங்கிருந்து சுரக்கிறது? வேட்பாளர்கள், தனி மனிதர்கள் வழங்கும் தொகை மட்டும் போதுமா? கம்பெனிகள், அரசியல் கட்சிகளுக்கு நேரடி நன்கொடை வழங்க தடையுள்ளது. ஆயினும் கம்பெனி முதலாளிகளின் கறுப்புப் பணம் அரசியல் கட்சிகளுக்குக் கை மாறுகிறது. ஊழலற்ற புனித ஆட்சி வழங்குவோம் என்பவர்கள், இப்படி அசுத்தமான முறையில் தான் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். பணம் எப்படி வந்தது? என்ன செலவாயிற்று? என்று தேர்தல் கமிஷன் எந்தக் கட்சியையும் கேட்பதேயில்லை.

"அரசியல் கட்சிகளுக்குப் பணம் வழங்குவது நல்ல முதலீடாகும். காலப்போக்கில் நல்ல 'டிவிடென்ட்' கிடைக்கும்"

"இந்த விதத்தில் என்னை நானே ஆதரித்துக் கொள்கிறேன். அரசியல் கட்சிகளுக்கு, கட்சிகளுக்கேற்ப பணம் தருகிறேன். அவர்கள் பக்கம் இருப்பதாக ஒவ்வொருவரும் நினைத்துக் கொள்ளட்டும். என் நிலையை பாதுகாப்பாக்கியுள்ளேன். எந்தக் கட்சி ஆட்சிக்கு வருமென யாருக்குத் தெரியும். ஆனால் எது வந்தாலும், அவர்களோடு நான் நல்ல உறவில் தான் இருப்பேன்"

[தொழிலதிபர்கள் சிலரின் கூற்று :—

ஆதாரம் சூர்யா இந்தியர் : ஜன 85.பக் : 23]

## சென்ற இதழ் தொடர்ச்சி... இனியாவது நாடு உருப்பட இதோ வழிகள்!

✱ சாதி, மொழி, மத, இனப் பெயருடைய அமைப்புகள், மாநாடுகள் ஆகியவற்றை முற்றுமாகத் தவிர்த்துவிட வேண்டும்.

✱ பிளஸ் 2 மேல் உள்ள கலை, அறிவியல் கல்லூரிகளை உடனடியாக முடிவிட வேண்டும். தொழிலியல், உழவியல் கல்வி நிலையங்கள் மட்டுமே உயர் கல்வி அளவில் இருத்தல் வேண்டும்.

✱ மாநில அரசு, மைய அரசு, எம்.எல்.ஏ , எம்.பி. என்ற இரட்டை ஆட்சி முறையையும், அதனால் ஏற்படும் இரட்டைச்

FREE E- BOOKS , www.thamizham.net.,

செலவையும் தவிர்த்துவிட வேண்டும். சிற்றூர் தொடங்கி, பெரும்பட்டணம் வரையில் படிப்படியாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்தே மாநில அரசு அமைக்கப்பட வேண்டும். மைய அளவில் தனியரசு தவிர்க்கப்பட்டு, ஓர் இணைப்புக் குழு (Co-ordination Committee) மட்டுமே போக்குவரத்து, தொடர்பியல், பாதுகாப்பு, அயல்நாட்டு அரசு ஆகியவற்றிற்காக அமைக்கப்பட வேண்டும். தேர்தல் நாளை, அரசோ, அதிகாரிகளோ தீர்மானித்தல் கூடாது. காலண்டர்தான் தீர்மானிக்கும்.

✳ வாக்களிப்பது கட்டாயமாக்கப்பட வேண்டும். உறுப்பினர் தேர்ந்தெடுப்பில் விகிதாசாரப் பிரதிநிதித்துவமே பின்பற்றப்பட வேண்டும்.

✳ இந்திய மொழிகள் அனைத்தும் சம உரிமை வாய்ந்தவை. அந்தந்த வட்டாரங்களில், வட்டார மொழியே எங்கும் எதிலும். ஆங்கிலம் மட்டும் வட்டார இணைப்பு மொழியாக்கப்பட வேண்டும்.

✳ தலைமை அமைச்சர், ஏழு துணைத் தலைமை அமைச்சர்கள் எனப் பொறுப்புகள் விரிவாக்கப்பட்டு, அவை வட்டாரந்தோறும் கிடைக்கும்வண்ணம் சுயற்சி முறை, ஸ்விஸ் நாட்டைப் போல அமுல்படுத்தப்பட வேண்டும்.

✳ தேர்தலில் வாக்காளர் தகுதி எஸ். எஸ். எல். சி., ஊர் மன்ற, சட்டமன்ற உறுப்பினர் தகுதி பட்ட வகுப்பு; நாடாளுமன்ற அமைச்சர் தகுதி முதுநிலை வகுப்பு என்பது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

இவற்றைச் செய்தால், நமக்கு வருங்காலம் உண்டு: இல்லை எனில் மைய, மாநில அரசினரும், அரசியல் வாதிகளுமாகச் சேர்ந்து ஒன்று செய்யட்டும்: போபாலில் எஞ்சியுள்ள நச்சு வாயுவை ஊர் தோறும் திறந்துவிடட்டும். நாம் போய்ச் சேருவோம்! ஆளவந்தாருக்கு — வரிகளை எல்லாம் தன்னுடைய செய்து, இறக்குமதி செய்த ஹெலிகாப்டர்கள் இருக்கின்றன. அவற்றில் ஏறி, அமெரிக்காவிற்குத் தப்பி விடட்டும் எப்படி யோசனை?

— விழிப்பூட்டி

FREE E- BOOKS , www.thamizham.net.,

# மேலை நாட்டு  மருந்து கம்பெனிகள்!?

அடிப்படைத் தேவைகளில் ஒன்றான மருந்து உற்பத்தியில் கொள்ளை இலாபக்காரர்கள் பொது மக்களைச் சூறையாடும் போக்கு சர்வசகஜமாகி விட்டது. 1975 இல் ஜெய்சுக்லால் ஹத்தி கமிட்டி திடுக்கிடும் தகவல்களைச் சமர்ப்பித்தது. உற்பத்தியான மொத்த மருந்துகளில் 80% பன்னாட்டு மூலதனக் கம்பெனிகள் உற்பத்தி செய்கின்றன. இவற்றில் 90% வசதி படைத்தவர்கள் பயன்படுத்தும் ஆடம்பர மருந்துகள். பொது சுகாதாரத்திற்குச் சவால்விடும் தொழுநோய், காசநோய் இவற்றைக் குணப்படுத்தும் அடிப்படை மருந்துகள் இலாபம்,குறைவாகத் தருவதால் 90% உள்நாட்டு மருந்து தயாரிப்பாளர்களே உற்பத்தி செய்கின்றனர். உயர் தொழில் நுட்பங்களை மருந்து உற்பத்தியில் புகுத்துகிறோம் என்ற போர்வையில் அரசு அனுமதி பெற்று இலாபப் பங்கு, ராயல்டி தொழில் நுட்பக் கட்டணம் என்ற பெயர்களில் ஆண்டுதோறும் கோடிக்கணக்கில் அந்நியச் செலாவணியை பன்னாட்டு நிறுவனங்கள் கொள்ளையிட்டுச் செல்வது விபரமில்லா பொதுமக்களுக்கு தெரிய நியாயமில்லை.

மேலும் மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி மருந்துகளை வேதியியல் பெயரில் விற்காமல் வியாபாரப் பெயரில் ஒரே மருந்தை பல பெயர்களில் விற்று அப்பாவி மக்களை ஏமாற்றுகின்றனர்.

சர்க்கரையை,சர்க்கரை என்ற பெயரில் பல்வேறு விலைகளில் விற்றால் பொதுமக்கள் பொறுக்கமாட்டார்கள். மருந்துகளை அவற்றின் வேதியியல் பெயரில் மற்றும் விற்றால் மக்களை ஏமாற்ற முடியாது.

மேலை நாடுகளில் 30 மருந்துவருக்கு 1 மருத்துவப் பிரதிநிதிதான். இந்தியாவிலோ 4 மருத்துவருக்கு ஒரு பிரதிநிதி. ஆனால் மருத்துவ ஆராய்ச்சிக்கு அங்கு உற்பத்தியில் 15% செலவிடுகையில் இங்கு 1% மட்டுமே செலவிடுகிறார்கள். ஆனால் விளம்பரத்திற்கு 17% செலவிடுகிறார்கள்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

இதில் இவர்களின் அப்பட்டமான வணிக உணர்வு வெளிச்சமாகிறது.

மேலும் மருந்து விலைக்கட்டுப்பாடு உத்தரவு 1979இல் பிறப்பிக்கப்பட்டவுடன் இந்நிறுவனங்கள் குயிங்கம், குழந்தைகளுக்கான ஷாம்பூ பவுடரை உற்பத்தி செய்ய ஆரம்பித்துவிட்டன. தவிர மூன்றாம் உலக நாடுகளில் விழிப்புணர்வடைந்த அரசுகள் சீர்திருத்தங்களைக் கொண்டு வர முயன்றால் அமெரிக்கத்தலையீட்டால் அவ்வரசுகள் வாங்குவதை வாங்கிக் கொண்டு வாயடைத்துப் போய்விடுகின்றன.

பன்னாட்டு நிறுவனங்களின் பணம், தேர்தல்கால உதவி இதர கவர்ச்சிகள் அரசியல்கொலை ஆட்சிக்கவிழ்ப்பு இவற்றுக்கு மசியாத அரசியல்வாதிகளே கிடையாது. அவர்களை நம்பிப் பயனில்லை. விழிப்புணர்வூட்டும் பொதுமக்களின் இயக்கங்கள்தான் இது போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இயலும்.

—வே. தனமயந்திரன்

## எமக்கு வந்தவை

<u>சுற்றுப்புற சுகாதாரம்</u> (6.00) பி.எஸ். ராஜேந்திரன். M/s பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக்குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை-600 004

<u>வீட்டுப் பொருள்களைப் பாதுகாப்பது எப்படி?</u> (7.00) எஸ். ஏ. துரைராஜா.

<u>உடல் நலம் கெடாமல் வாழ்வது எப்படி?</u> (4.00)-முல்லை பி:எல் முத்தையா.

மேற்கண்ட இரண்டு வெளியீடு :. M/s ஸ்டார் பிரசுரம், 72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 045.

<u>நிர்வாணம்</u> (கவிதை நூல்) அனு. இராமநாதன் M/s சங்கமம் பப்ளிகேஷன்ஸ், 25, ஸ்டேட் பாங்க் காலனி (Old) மேற்கு தாம்பரம், சென்னை 600 005.

<u>குழந்தைகள் நகைச்சுவை</u> (2 00) மு. சாயபு மரைக்காயர் M/s பாத்திமா பதிப்பகம், 64, காஜியார் வீதி, காரைக்கால்.

<u>ஈழவர் இடர்தீர</u> (3.00) -இ. ரத்தின சபாபதி.

<u>இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்</u> (மலையக மக்கள் வரலாறு) (10.00) .க. மோகன், மேற்கண்ட இரண்டும் பெற:. "ஈழம்" த. பெ. எண் 2356. சென்னை-600 024.

<u>லங்காராணி</u> (10.00) அருளர், M/s. கனல் வெளியீடு, 75, ஆழ்வார் பேட்டைத் தெரு, சென்னை-600 018.

FREE E- BOOKS , www.thamizham.net.,

__*சுவடுகள்*__ (கவிதைத் தொகுப்பு) (0.75) -கோவை சதாசிவம் காட்டுவளவு, திருப்பூர்.638 604.

__*பாவம் இந்த பாரதப் பெண்கள்*__ (1.50) -க. சுப்பையா M/s. உழைக்கும் மகளிர் முன்னேற்ற சங்கம், 35, S.M.V. புரம், வில்லியனூர், பாண்டிச்சேரி.605 110.

__*சமுதாய ஊனம்*__ (சிறுகதைத் தொகுப்பு) (8.00) -புலவர் கரு. செல்லமுத்து, M/s தமிழ்ச்செல்வன் பதிப்பகம், 1837, அம்பாள் புரம் முதல்வீதி, புதுக்கோட்டை.622 001.

__*குறும்பா*__ (4.00) -த. கோவேந்தன், M/s வளர்மதி பதிப்பகம், S-2, இராணி அண்ணா நகர், கே.கே. நகர், சென்னை.600 078.

__*பெருஞ்சித்திரனின் போலிப் புலமையும் கயமைப் போக்கும்*__ (3.00) -மு. ச. சிவம் -M/s மீரா நிலையம், டி-121, சம்பத் நகர், ஈரோடு.11.

__*அக்கினிக் குஞ்சுகள்*__ (கவிதை நூல்) (7.00) -மானூர் ஆ. புகழேந்தி M/s வெண்ணிலா பதிப்பகம், 8/12, மருதூர், இராமநாதபுரம், கோவை.641 045.

__*கல்வெட்டுகள்*__ (8.00) -கவிஞர் வைரமுத்து -M/s கலைஞன் பதிப்பகம், 10, ஹென்ஸ்மென் ரோடு, சென்னை.600 017.

__*கேட்டிருப்பாய் காற்றே*__ (குறுநாவல்கள்) (12.00)-செ. யோகநாதன் -M/s ஐந்திணைப் பதிப்பகம், 15, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.600 005.

__*மொழியும் அதன் வாழ்வும்*__ (16.00) -நிர்மலா சுரேஷ்
__*மண்ணில் பதியும் பாதங்கள்*__ (7.50) -நிர்மலா சுரேஷ்
மேற்கண்ட இரண்டுமே வெளியீடு: 'பிரயத்னா' 22E, தெற்கு அவின்யூ, காமராஜ் நகர், சென்னை-600 041.

● *சென்ற இதழில் இப்பகுதியில் ஒரு திருத்தம்:— __நாங்கள் அறிந்த மணி__: இந்நூலின் விலை ரு 10.00 (ரு 4.00 அல்ல) __தொகுப்பாசிரியர்__: கு.கோலப்பன் (கு. சோலப்பன் அல்ல)*


"**இலக்கிய வீதி**"*யின் பரிசுபெற்ற சிறுகதை தொகுப்பு*
*பதிப்பாசிரியர் இனியவன்*

| | |
|---|---|
| *விடியும்-வெளிச்சம் வரும் (1981)* | 5-50 |
| *விதை நெருப்பு (1983)* | 6-00 |
| *தீவுகளாகும் உறவுகள் (1984)* | 8-00 |

*விரிவான விலைப்பட்டியலுக்கு எழுதுக V-P-Pயில் பெற கார்டு எழுதவும்.*

**"புத்தகப் பூங்கா"**
*29. நல்லண்ண முதலி தெரு இராயப்பேட்டை, சென்னை-14.*


FREE E- BOOKS , www.thamizham.net.,

**சுட்டி சந்தா** ரூ 7-தான்! 12 இதழ்கள் அஞ்சலில் பெற பணவிடை செய்யுங்கள். எல்லாத் தொடர்புகளுக்கும் சுட்டி 1494 அண்ணாநகர், சென்னை 600 040.

**சுட்டி முன் இதழ்களைப் படிக்காதவர்கள்** இப்போதும் சிலவற்றைப் பெற முடியும் இதழ் எண்கள் : 1 முதல் 17, 19, 21, 22 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். இதழுக்கு 45 காசு வீதம் அஞ்சல் தலை அல்லது பணவிடை அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

**சுட்டி இன்றும் இம்மாதம் வந்து சேரவில்லை** என்று சில சந்தாதாரர்கள் மௌனமாக வருந்திக் கொண்டிராமல் எங்களுக்கு வராமை பற்றித் தெரிவியுங்கள். என்ன முயற்சி எடுத்தும் சில சுட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது இன்னும் நீங்கவில்லை. சந்தா முடிய காலமிருந்தும் 15ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்கப்பெறா சந்தாதாரர்கள், சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர், முகவரி) எழுதினால் மீண்டும் ஒருமுறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.

**சுட்டியை இலவசமாக அனுப்புங்கள்!** சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

# அடுத்த இதழில்-அஞ்சல் தந்தி பற்றிய...

ஊடுருவல் கட்டுரைகள், கார்டூன்கள் இடம் பெறும் வாசகர்களின் கட்டுரைகளும், இத்துறையில் பணியாற்றுவோரின் கருத்துரைகளும் வரவேற்கப்படுகின்றன.

**வாசகர் எதிரொலி** ஒவ்வொரு இதழைப்படித்த பின்பும் உங்கள் கருத்தை அவசியம் எழுதுங்கள். சுட்டியை இன்னும் சிறப்பாகக் கொண்டுவர இது மிகவும் உதவியளிக்கும். அடுத்த இதழ் முதல் எதிரொலிக்கும் அத்தனை வாசகர்களின் பெயரும் சுட்டியில் இடம் பெறும்.

சென்னையில் உங்களின் நம்பகம் வாய்ந்த பிரதிநிதியாய் செயல்பட விரும்புகிறோம். ஆலோசனைக் கட்டணம் ரூ. 5/- உடன் உங்களுக்குச்செய்யவேண்டிய பணிகளின் விவரத்தினை தெரிவிக்க வேண்டிய முகவரி :—

**மைதிலி மோகன்,**

24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர், சென்னை-600 053


FREE E- BOOKS , www.thamizham.net.,

# 6 தூக்கு மேடையில் தோழர் பகத்சிங்

நவஜவான் பாரத் சபாவின் முதன்மையான கொள்கையும், குறிக்கோளுமாகக் கூறப்பட்டு உள்ள வரிகளின் தமிழாக்கம் இதுதான் :—

" இந்தியா முழுமைக்குமான தொழிலாளர், விவசாயிகளின் பூரணச் சுதந்திரக் குடியரசை நிறுவுதல்,,

அதாவது, பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சியை ஏற்படுத்துதல்!' இந்தக் கொள்கை, காங்கிரஸ் பேரியக்கத்தின் கொள்கையிலிருந்து, மிக நுட்பமாகவும், மிகச் சரியாகவும் வேறுபட்டுள்ளமையை நாம் உணர வேண்டும்! சோஷலிசக் குடியரசை நிறுவுவது என்பதையே இலட்சியமாகக் கொண்டது இந்த சபா என்பதையும் இவ்வரிகள் உணர்த்துகின்றன.



இத்தகைய சரியான பார்வையை, அன்றும் பெரும்பாலான மக்கள் புரிந்து கொள்ளவில்லை. ஆனால், வெள்ளையர்களின் போலீஸ் துறை, மிகச் சரியாகப் புரிந்து கொண்டது.

காங்கிரஸ் இயக்கம் வளர்வதைக் காட்டிலும், இவ்வியக்கத்தின் வளர்ச்சியே, தங்களின் ஆணவ ஆட்சிக்குப் பெருங்கெடுதலாய் முடியுமென அவர்கள் நம்பினர்.

இவ்வியக்கத்தை வளரவிட்டால், விளையக் கூடிய ஆபத்துக்கள் பற்றியும், இதனைத் தடைசெய்ய வேண்டிய

FREE E- BOOKS , www.thamizham.net.,

தன் அவசியம் பற்றியும், போலீஸ் அதிகாரிகள் விரிவாக விவாதித்தனர். அவர்கள் விவாதங்களின் சில பகுதிகள் அரசாங்கக் கோப்புகளில் இன்றும் உள்ளன. அதன் உண்மை நகலைப் பக்கத்தில் காணலாம்.

நவஜவான் பாரத் சபாவைத் தடை செய்வது பற்றிப் போலீஸ் துறையினர் சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில், சபா தன்னுடைய அடுத்த பரிணாமத்தைக் காணத் தொடங்கியது!

பஞ்சாப் உ.பி., ராஜஸ்தான், பீஹார் முதலான மாநிலங்களின் புரட்சிவாதிகளான பகத்சிங், சுகதேவ், சிவவர்மா போன்றோர் ஒன்று சேர்ந்து, தனித்தனியே இயங்கிவரும் தங்களின் குழுக்களையெல்லாம் ஒன்றிணைத்து, ஒரு மிகப் பெரிய இயக்கத்தை உருவாக்குவது பற்றி ஆலோசித்தனர். (இவர்களில் சிவவர்மா மட்டுமே, மிக வயது முதிர்ந்த நிலையில், லக்னோவில் இன்று வாழ்ந்து வருகிறார். —கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்) கட்சியின், உ. பி. மாநிலத் தலைவர்களில் ஒருவராக உள்ளார்).

டெல்லி பெரோஷா கோட்லாவில் நடைபெற்ற இரண்டு நாள் ஆலோசனைக்குப் பின் தோன்றிய, அந்த மாபெரும் இயக்கம்தான்,

**"ஹிந்துஸ்தான் சோஷலிஸ்ட் குடியரசுச் சங்கம்"**

என்பதாகும்!

(தொடரும்)

— சுப. வீரபாண்டியன்

---


## சுட்டி சிறுகதைப் போட்டி!

"சுட்டியின் 50 வது இதழை ஒட்டி நடத்தப் பெறும் இப்போட்டிக்குச் சிறுகதைகள் அனுப்ப இறுதி நாள்: 28-2-85 (தள்ளி வைக்கப்பட்டுள்ளது) முக்கிய விதி: சிறு கதை சுட்டியின் ஒரு பக்க அளவில் சமூக பார்வையுடன் "சுருக்" என்றிருக்கவேண்டும். தேர்வும் பரிசும்: தேர்ந்தெடுக்கப்படும் எல்லாக் கதைகளும் வெளியிடப்படும். ரூ 15 பரிசளிக்கப்படும். கவனிக்க: வெளியிடாக் கதைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா. அஞ்சல் தலைகள் வைக்க வேண்டா. பிரதிஎடுத்துக் கொண்டு அனுப்புக. தேர்ந்தெடுத்தால் தெரிவிக்கப்படும்.


FREE E- BOOKS , www.thamizham.net.,

## ஈழத்தமிழர்களை அழிக்க → மொசாட்

இன்று உலக நாடுகளையே நடுங்க வைத்துக் கொண்டிருக்கிறது இஸ்ரேல் உளவுப்படையான மொசாட் (MOS SAD) இது அமெரிக்காவின் சி.ஐ.ஏ, சோவியத்தின் கே.ஜி.பி, பிரிட்டனின் எம்-16 ஆகிய உளவுப்படைகளை விடவும் ஆற்றல் மிக்கது!

இஸ்ரேலுக்கே 37 வயது தான் ஆகிறது. ஆனால் 1951லேயே நிறுவப்பட்ட மொசாட் தான் உலகிலேயே மூத்ததாகும். புத்திசாலித்தனத்துடன் வன்முறை, கொடூரம், மோசடித்தனம் நிறைந்த சகல கலா பாவிகளின் கூட்டமே இந்த மொசாட்.

குற்றவாளிகளாக அம்பலப்படுத்தப்படாமலிருக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இது அதிக அக்கறை செலுத்துவதால் உலகின் முன்னணி உளவுப்படை நிறுவனங்களால் கூட இதன் அமைப்பையோ, செயல் திட்டங்களையோ அறிய முடிவதில்லை. இதன் ஏஜெண்டுகள் பூமியெங்கும் மேய்கிறார்கள். மீனம்பாக்கம் விமான நிலைய வெடிகுண்டு சம்பவங்கூட இவர்கள் வேலையென சந்தேகிக்கப்படுகிறது.

ரசாயனப்போர்கள், கிருமிப்போர்கள் இவையே இவர்களின் வஞ்சக ஆயுதங்கள்; இவைகளால் குறிப்பிட்ட பரப்பில் உள்ள மக்களை நடைபிணங்களாக்க முடியும், இன விருத்தி செய்யும் ஆற்றலை அழித்து ஒரு இனமே உருவாகாமல் செய்யமுடியும். சின்னக் குழந்தைகளை அழிக்க இப்பாதகர்கள், பிளாஸ்டிக் ஆப்பிள்கள், பொம்மைகள் வடிவில் குண்டுகள் செய்து தரையில் போட்டுவிடுவார்கள். அவற்றை விளையாட்டுப் பொருட்கள் என குழந்தைகள் கையால் தொட்டால், அவை வெடித்து குழந்தைகளைச் சிதைக்கும்.

இந்தக்கயவர்களின் கையில் தான் உலகின் முதல் தரமானதும், மனித சக்தியையே படம் எடுக்கக் கூடியதுமான கிர்லியன் புகைப்படக் கருவிகளும், எலக்ட்ரானிக், ரேடார்

FREE E- BOOKS , www.thamizham.net.,

கருவிகளும், அன்றாடப் புழக்கத்திலுள்ளன. இந்தத்துப் பறியும் நாய்களுக்கு எதிரிநாட்டைப் பற்றிய துல்லியமான தகவலைச் சரியான நேரத்தில் இந்தக் கருவிகளே தருகின்றன

இந்தக் கொடிய மொசாட் படை தமிழ் விடுதலைப் புலிகளை நிர்மூலமாக்க ஸ்ரீலங்கா அரசின் அழைப்பின் பேரில் நம் அண்டை நாட்டில் பகிரங்கமாக தரையிறங்கி யுள்ளது. சுமார் 150 மொசாட் ஏஜண்டுகள் அங்குள்ளனர். விடுதலைப்புலிகளை சித்திரவதை செய்து விஷயத்தை அறியும்முறை, கூட்டம் கூட்டமாகக் கொன்று குவிக்கும் முறைகளை இலங்கையில் ராணுவத்திற்குக் கற்றுக் கொடுப்பதே இவர்கள் கடமையாம். தமிழர்களை இனங் கண்டு அழிக்க, தமிழர் பகுதிகளின் தேர்தல் பட்டியல் இவர்களிடம் தரப்பட்டுள்ளதாம். இது தவிர சிங்களக் காலி களையும், சாதாரண மக்களையும், அமைச்சர்களின் தனிப் படைவீரர்களையும் கூட இவர்கள் பயிற்சியில் ஈடுபடுத்து கின்றனராம். இவ்விதம் சுமார் 3000 சிங்கள அரசியல் காலி கள், தமிழர்கள் மேல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளனராம்.

அமெரிக்க சி. ஐ. ஏ இஸ்ரேல் மொசாட் இவை யிரண்டும் ஒன்றுக்கொன்று ஆதரவு நல்கி அழிவுப் பணி களில் பேய்த்தனமாக கைகோர்த்து வேலை செய்து வருகின்றன. அமெரிக்கத் தூதரகத்தில் இஸ்ரேல் நாட்டின் மீது தனிப்பட்ட அக்கறையுடன் செயல்படக்கூடிய பிரிவு ஒன்றை இலங்கையில் ஏற்படுத்த வேண்டும் என்ற உள் நோக்கத்திலேயே இலங்கை ராணுவ அதிகாரிகளுக்கு கொடுமைப் பயிற்சி அளிக்கப்படுவதாகவும் தெரிகிறது.

நிலா


**சென்னைக்குப் பெருமை சேர்ப்பவை**

✳ உலகத்தின் 2-வது அழகிய கடற்கரை ✳ ஆசியா வின் மிகப்பெரிய ரயில்பெட்டி தொழிற்சாலை
✳ ஆசியாவின் 2-வது பெரிய படப்பிடிப்பு நிலையம். அத்துடன் இந்தியாவின் மிகச்சிறந்த போஸ்டர் அச்செழுத்து தயாரிப்பாளர்கள்—

**ரங்கா டைப் பௌண்ட்ரி**

சென்னையில் எல்லாவித அச்செழுத்துக்கள், அச்சக உப கரணங்கள் [illegible] நம்பகமான இடம் இது தான். தொடர்பு கொள்க :- 7[illegible], [illegible]டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-112. பேசி : 37999, 664[illegible]93.


FREE E- BOOKS , www.thamizham.net.,

# ஏழாவது நாள்!

வாராந்திர விடுமுறை என ஞாயிற்றுக்கிழமைகள் வீணடிக்கப்படுகின்றது. இதனால் அன்றைய 'பணி' முடக்கப்படுகின்றது. ஆறு பேர் வேலை செய்யும் ஒரு இடத்தில் ஏழாவது மனிதன் வந்தால் ஏழு நாளும் பணி நடைபெறும். நாளைக்கு ஒருவர் வீதம் ஓய்வும் எடுக்கலாம். இதனால் பல்வேறு துறைகளிலும் வேலை வாய்ப்பு பெருகி உடனடியாக வேலை கிடைக்கும். கல்வி நிறுவனங்களில் கூட இதனை நடைமுறைப் படுத்தினால் மாணவர்கள் படிக்கும் போதே வேலை வாய்ப்பு பெற்றிட இயலும். இன்று விவசாயப்பணிகளில் கூட பயன்படும் 'ஷிப்டு' முறையை முன்னேறி வரும் விஞ்ஞானத்தின் உதவியோடு எல்லாத் துறைகளிலும் கடைப் பிடித்தால் இப்போது இருப்பது போன்று இன்னும் இரண்டு பங்கு ஆட்கள் உழைப்பதற்குத் தேவைப் படுவார்கள். அப்போது வேலையில்லா திண்டாட்டம் நீங்கி வேலைக்கு ஆள் பற்றாக்குறை கூட வந்துவிடும்.

தேசத்தின் இலட்சியத்தினை அடையவும், குறியீட்டினை எட்டுவதற்கும் அதிக நாட்கள் ஆகிவிடாது. இதனால் பணிக் குழப்பமும், தலைமையிடங்களில் பணி குவிதலும் நேரிடலாம் என்றால் அதனையும் நிர்வாக முறை மற்றும் நடைமுறை மாற்றத்தினால் சரி செய்து விடலாம். தேசத்தின் எல்லாத் துறைகளையுமே 24 மணி நேரமும் இயங்குகின்ற மருத்துவத் துறை, தீயணைப்புத் துறை, தொலைபேசித் துறை போன்று மாற்றியமைத்து விடலாம்.

நாளொன்றிற்கு ஆறு மணி நேரம் வீதம் வாரத்திற்கு ஆறு நாட்களுக்கு முப்பத்தாறு மணி நேரம். ஆக 52 வாரத்திற்கு '1872' மணி நேரமே உழைப்பிற்காக செலவிடப்படுக்கின்றது. வருடத்தில் மீதியுள்ள (24×365-1872) 6888 மணி நேரம் வீணடிக்கப்படுகின்றது. இதனையும் உழைக்கும் நேரமாய் மாற்றினால் தேசத்தின் இலட்சியம் வெகு விரைவில் பூர்த்தியாகி, தனி மனித தேவைகளும் பூர்த்தியாகும். சுபிட்சம் வெகு விரைவிலேயே வந்துவிடும்.

சிந்திக்க வேண்டியவர்கள் சிந்திப்பார்களா?

—எஸ். வி. பி. வீரக்குமார்

FREE E- BOOKS , www.thamizham.net.,

## எந்த ஐயத்திற்கும் பதில் - 2 ரூபாயில்!

'யாரிடம் கேட்பேன்? எங்கு போய்த் தேடுவேன்?' என்று குழம்பித் தவிக்கும் நிலை இனி யாருக்கும் வேண்டாம். மனித அறிவுக்கு எட்டிய அத்தனை துறைகளுக்கும் கூட்டு பதிலாளர் குழு நிபுணர்களைக் கொண்டு பதில் அளிக்க முயல்கிறது.

**இதுபோன்ற கேள்விகளா? அல்லது வேறு மாதிரியா? கேளுங்கள்**

* புதிதாக சிறுதொழில் தொடங்க யாரை எப்படி அணுகுவது என வழி காட்டுக
* "தனிச்சுற்றுக்கு மட்டும்" என்றுப் போட்டுப் பத்திரிகை நடத்துவது சட்டப்படி சரியா?
* 10 ஆண்டுகளாக குழந்தைப் பேறின்றி பரிதவிக்கும் எனக்கு விமோசனம் பிறக்குமா?
* வீட்டுக்காரன் வீட்டை காலி செய்யச் சொல்லி அநியாய வழிகளில் மிரட்டுகிறான். சட்டம் எனக்கு உதவுமா?
* உலகில் கம்யூனிஸ்டு கட்சியின் ஆட்சி நடக்கும் நாடுகள் எத்தனை?

கேள்வி ஒன்றுக்கு ரூ 2-00 விதம் பணவிடை அல்லது அஞ்சல் தலை அனுப்புங்கள். பதில்களைத் தனிப்பட்ட முறையில் அஞ்சலில் அனுப்புகிறோம். எழுதுக: கூட்டு பதிலாளர் குழு, 1494 அண்ணாநகர், சென்னை-600040

## சு. சமுத்திரத்தின்
## சமூகப்பார்வைமிக்க நூல்கள்

| | |
|---|---|
| சமுத்திரம் கதைகள் | 7-25 |
| இல்லந்தோறும் இதயங்கள் | 12-00 |
| காகித உறவு | 5-75 |
| ஒரு சத்தியத்தின் அழுகை | 6-00 |
| வளர்ப்பு மகள் | 7-00 |
| வேரில் பழுத்த பலா | 12-00 |
| உயரத்தின் தாழ்வுகள் | 6-50 |
| நெருப்புத் தடயங்கள் | 18-00 |
| புதிய திரிபுரங்கள் | 8-25 |
| ஊருக்குள் ஒரு புரட்சி (பரிசு பெற்றது) | 9-00 |

**மணிவாசகர் நூலகம்**
புத்தகம் வெளியிடுவோர், 89, லிங்கிச் செட்டித் தெரு,
சென்னை-600 001.
போன்: 512996


FREE E- BOOKS , www.thamizham.net.,

# கேட்க வேண்டிய கேள்விகள்

**"போலிஸ்காரர் நமது நண்பர்" என்று முன்பு பள்ளிக்கூடப் பாடமொன்று வருமே அது இப்போதும் பொருந்துமா?**



பொருந்துமே. இந்திரா மரணத்தை ஒட்டி ஏற்பட்ட புதுடில்லி கலவரத்தில் போலீஸ் யாருக்கு நண்பர் என்பதை இப்படம் தெளிவுபடுத்துகிறதே.

● **இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாடு வேண்டாம் என்று எதிர்ப்போரும் உள்ளனரா?**

உண்டு. 10 குழந்தைகள் பெற்றெடுக்கும் தாய்மார்களுக்கு பரிசளிப்பதாக 'இந்து முன்னணி' அறிவித்துள்ளது. அண்மையில் 4 பெண்களுக்கு இவ்வாறு ரூ 500 பரிசளித்து வீரத்தாயார் என்ற பட்டமும் வழங்கியுள்ளது.

● **மாற்று இதயம் சிறுநீரகம் போன்ற அறுவை சிகிச்சைகள் தொடர்ந்து வெற்றியளிக்க முடியுமா?**

முடியும். அமெரிக்காவில் 1983இல் நடந்த இத்தகைய அறுவை சிகிச்சை பற்றிய கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் நல்ல நம்பிக்கையளிக்கின்றன; (செலவு குறையுமா?)

| | நடந்த மாற்றங்கள் | செலவு (டாலரில்) | ஓராண்டு வெற்றி வாய்ப்பு | இன்றும் காத்து இருக்கும் நோயாளிகள் |
|---|---|---|---|---|
| இதயம் | 172 | 1,00,000 | 80% | 40 |
| சிறுநீரகம் | 6,116 | 30,000 | 60-85% | 7000 |
| ஈரல் | 163 | 1,35,000 | 65% | 175 |
| பங்கிரியாஸ் | 218 | 35,000 | 35-40% | 30 |

(ஆதாரம் டைம் : 10.12.84)

FREE E- BOOKS , www.thamizham.net.,





ஆசிரியர்: கு. நாராயண பாரதி, வெளியிடுபவர்: கி. ராமச்சந்திரன், 1494 அண்ணா நகர், சென்னை- 600040. அச்சிடுவோர்: ஜே. எஸ். கிட்ராஜ் ஷா, இந்தூரா பிரிண்டர்ஸ், 96, சாமி தெரு, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை-600002.

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE  E- BOOKS , www.thamizham.net.,

[illegible] 1985 Regd. No. TN/MS(N)/317
Allowed to post without prepayment Licence No. TN/MS(N)WP .56

http://www.thamizham.net
FREE E-BOOKS (TAMIL)




# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

**Head Office:**
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

**Reg. Office & Factory:**
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E- BOOKS , www.thamizham.net.,